QUESTION 1. Unanswered

கூற்று (A) **:** உயிர் எழுத்துகள் பன்னிரெண்டும் , இடையின மெய் எழுத்துகள் ஆறும் பிறக்கும் இடத்தால் ஒன்றுபடுகின்றன .

காரணம் (R) **:** நன்னுலார் இவ்விரு எழுத்துகளும் தலையை இடமாகக் கொண்டு பிறக்கின்றன என்று குறிப்பிடுகிறார் .

குறியீடுகள் :

A. கூற்று (A) சரி , காரணம் (R) தவறு

B. கூற்று (A) தவறு , காரணம் (R) சரி

C. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி

D. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் தவறு

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 2. Unanswered

தவறான இணையைத் தேர்ந்தெடுக்க .

(எழுத்துகள்) (இடப்பிறப்பு)

A. வல்லினம் - மார்பு

B. மெல்லினம் - மூக்கு

C. ஆய்த எழுத்து - தலை

D. மேற்கண்ட எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c

d) d
e) e

QUESTION 3. Unanswered

கீழ்வரும் நன்னூல் நூற்பா வரிகளைக் கவனித்து, கோடிட்ட இடத்தை நிரப்புக.
“மேவும் மென்மை, மூக்கு உரம் பெறும் _____”

A. அங்காப்பு
B. இடைமை
C. வன்மை
D. விளிம்பு
E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 4. Unanswered

பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க .

I. ‘ அ , ஆ ’ ஆகிய இரண்டு உயிர் எழுத்துகளும் வாய் திறத்தலாகிய முயற்சியால் பிறக்கின்றன .

II. ‘ உ , ஊ , ஒ , ஓ , ஔ ’ ஆகிய ஐந்தும் வாய் திறக்கும் முயற்சியுடன் இதழ்களைக் குவிப்பதால் பிறக்கின்றன .

III. ‘ இ , ஈ , எ , ஏ , ஐ ’ ஆகிய ஐந்தும் வாய் திறக்கும் முயற்சியுடன் நாவின் நுனியானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்துவதால் பிறக்கின்றன .

மேற்கண்டவற்றுள் எது / எவை சரியானது ?

A. I மட்டும்

B. I மற்றும் II மட்டும்

C. I மற்றும் III மட்டும்

D. அனைத்தும்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 5. Unanswered

“ அங்காப்பு ” என்ற நன்னூல் சொல் உணர்த்தும் பொருள் யாது ?

A. இதழ் குவித்தல்

B. நாக்கு அண்ணத்தைத் தொடுதல்

C. வாய் திறத்தல்

D. மூக்கின் வழி காற்று வெளிப்படுதல்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 6. Unanswered

பொருத்துக.

(நாக்கின் பகுதி)	(மெய் எழுத்துகள்)
a) நாவின் முதற்பகுதி	1. ச், ஞ்
b) நாவின் இடைப்பகுதி	2. ட், ண்
c) நாவின் நுனிப்பகுதி	3. க், ங்

குறியீடுகள்:

	a	*b*	*c*
A.	3	1	2
B.	1	2	3
C.	2	1	3
D.	1	3	2

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 7. Unanswered

இதழ்களின் குவிதலால் பிறக்காத உயிர் எழுத்து எது ?

A. ஓ

B. ஔ

C. ஐ

D. உ

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 8. Unanswered

கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறான ஒன்றைக் கண்டறிக .

A. ‘ அவ்வழி ஆவி ’ என்னும் நன்னூல் பாடலடியில் ‘ ஆவி ’ என்பது உயிர் எழுத்துகளைக் குறிக்கும்

B. மெல்லின மெய்கள் பிறக்கும் போது மூக்கு முதன்மையான இடமாக அமைகிறது .

C. ய் - இது நாக்கின் அடிப்பகுதி , மேல்வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன .

D. ழ் - இது மேல்வாயை நாக்கின் ஓரங் கள் தடித்து வருடுவதால் பிறக்கின்றன .

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 9. Unanswered

“ அண்பல் முதல்நா விளிம்புற வருமே ” என்ற நூற்பா வரி எந்த எழுத்துகளின் முயற்சிப் பிறப்பைக் குறிக்கிறது ?

A. அ , ஆ

B. எ , ஏ

C. உ , ஊ

D. க் , ச்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 10. Unanswered

கோடிட்ட இடத்தை நிரப்புக .

“ அண்ணம் நுனிநா வருட _____ வரும் ”

A. பம

B. ரழ

C. கஙா

D. டண

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 11. Unanswered

‘ ன் ’ என்னும் மெய்யெழுத்தின் பிறப்பு குறித்த நன்னூல் கொள்கை எது ?

A. அண்ணம் நுனிநா வருடத் தோன்றும்

B. அடிநா அடியணம் உறத் தோன்றும்

C. அண்பல் முதல்நா விளிம்புறத் தோன்றும்

D. அண்ணம் நுனி நனியுறின் தோன்றும்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 12. Unanswered

தவறான இணையைத் தேர்ந்தெடுக்க .

(எழுத்து) (உறுப்பு)

A. ஒ - இதழ்

B. ஈ - அண்பல் , முதல்நா

C. வ - மேம்பல் , இதழ்

D. ம - அண்ணம்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 13. Unanswered

கூற்று (A) **:** ‘ ல ’ மற்றும் ‘ ள ’ ஆகிய இரு எழுத்துகளும் ஒரே உறுப்பு முயற்சியினால் பிறக்கின்றன .

காரணம் (R) **:** ‘ ல ’ என்பது அண்பல் முதலையும் , ‘ ள ’ என்பது அண்ணத்தையும் முறையே நா விளிம்பு தடித்து ஒற்றவும் வருடவும் பிறக்கின்றன .

குறியீடுகள் :

A. கூற்று (A) சரி , காரணம் (R) தவறு

B. கூற்று (A) தவறு , காரணம் (R) சரி

C. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி

D. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் தவறு

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a

b) b
c) c
d) d
e) e

QUESTION 14. Unanswered

ஆய்த எழுத்தின் முயற்சிப் பிறப்பு எது ?

A. வாய் திறத்தல்

B. நா , மேல் அண்ணம் பொருந்துதல்

C. இதழ் குவிதல்

D. அண்ணம் நுனி நா வருடதல்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 15. Unanswered

பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க .

I. அல்வழிப் புணர்ச்சியில் வன்தொடர்க் குற்றியலுகரத்தைத் தவிர ஏனைய குற்றியலுகரங்களின் முன் வரும் வல்லினம் மிகாது .

II. வேற்றுமைப் புணர்ச்சியில் சில மென்தொடர்க் குற்றியலுகரங்கள் தமக்கு இனமான வன்றொடர் குற்றியலுகரமாக மாறிப் புணரும் .

III. அல்வழிப்புணர்ச்சி மட்டுமே நெடில்தொடர் , உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் வருமொழியோடு சேரும்போது ஒற்று இரட்டித்துப் புணரும் .

மேற்கண்டவற்றுள் எது / எவை சரியானது ?

A. I மற்றும் II மட்டும்

B. I I மற்றும் III மட்டும்

C. I மற்றும் III மட்டும்

D. அனைத்தும்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 16. Unanswered

‘ நெடிலோடு உயிர்த் தொடர்க் குற்றியலுகரங்களுள் டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே ’ - இவ்விதிக்கு பொருந்தாத சான்று எது ?

A. ஆற்றுப்பாலம்

B. வீட்டுத்தோட்டம்

C. தெங்குக்கால்

D. பகட்டு வாழ்க்கை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 17. Unanswered

பிரித்து எழுதுக : ‘ கயிற்று வண்டி ’

A. கயிறு + வண்டி

B. கயிற்று + அண்டி

C. கயிறு + அண்டி

D. கயிற்று + வண்டி

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 18. Unanswered

‘ உறவு + அழகு = உறவழகு ’ - இப்புணர்ச்சிக்குரிய சரியான விதி எது ?

A. தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்

B. முற்றுமற்று ஒரே வழி

C. டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே

D. வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 19. Unanswered

வன்றொடர் அல்லாத குற்றியலுகரங்கள் அல்வழிப் புணர்ச்சியில் எவ்வாறு புணரும் ?

A. வருமொழி வல்லினம் மிகும்

B. வருமொழி வல்லினம் மிகாது

C. நிலைமொழி ஒற்று இரட்டும்

D. நிலைமொழி உகரம் திரியும்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 20. Unanswered

கொடுக்கப்பட்டுள்ள சொற்களுள் புணர்ச்சி விதிகளுக்குப் புறம்பான தவறான வடிவத்தைக் கண்டறிக .

A. கரும்பூண்

B. சிலப்பதிகாரம்

C. முரட்டுக்காளை

D. நாக்குக்கடிது

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 21. Unanswered

திசைப் பெயர்ப் புணர்ச்சியில் தவறான இணையைக் கண்டறிக .

A. தெற்கு + மேற்கு = தென்மேற்கு

B. தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு

C. வடக்கு + கிழக்கு = வடக்கிழக்கு

D. வடக்கு + மேற்கு = வடமேற்கு

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a

b) b
c) c
d) d
e) e

QUESTION 22. Unanswered

பொருத்துக.

a) நெடில்தொடர்க் குற்றியலுகரம்	1. கிணற்றுத்தவளை
b) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்	2. எஃகு சிறிது
c) ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்	3. பந்து கடிது
d) மென்தொடர்க் குற்றியலுகரம்	4. வீட்டுத் தோட்டம்

குறியீடுகள்:

	a	*b*	*c*	*d*
A.	4	2	3	1
B.	4	1	2	3
C.	1	4	3	2
D.	2	4	1	3

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 23. Unanswered

கூற்று (A) : ‘ செம்பு + குடம் ’ வேற்றுமைப் புணர்ச்சியில் ‘ செம்புக்குடம் ’ என்றே புணரும் .

காரணம் (R) : “ மென்றொடர் மொழியுள் சில வேற்றுமையில் தம்மின வன்றொட ராகா மன்னே ” என்ற விதிப்படி மாறும் .

குறியீடுகள் :

A. கூற்று (A) சரி , காரணம் (R) தவறு

B. கூற்று (A) தவறு , காரணம் (R) சரி

C. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி

D. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் தவறு

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 24. Unanswered

கூற்று (A) **:** ‘ மேற்கு + நாடு ’ என்பது புணரும் போது ‘ மேல்நாடு ’, ‘ மேனாடு ’ என இருவகையாகப் புணரும் .

காரணம் (R) **:** நிலைமொழியில் ‘ கு ’ நீங்கி , ‘ ற் ’ ஆனது ‘ ல் ’ ஆகவும் ‘ ன் ’ ஆகவும் மாறும் .

குறியீடுகள் :

A. கூற்று (A) சரி , காரணம் (R) தவறு

B. கூற்று (A) தவறு , காரணம் (R) சரி

C. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி

D. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் தவறு

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 25. Unanswered

தவறாக பிரிந்துள்ள சொல்லைக் கண்டறிக .

A. காட்டுக்கோழி = காடு + கோழி

B. கீழ்நாடு = கீழ் + நாடு

C. வரவறிந்தான் = வரவு + அறிந்தான்

D. நாகுதலை = நாகு + தலை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 26. Unanswered

‘ மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ’ என்னும் விதிப்படி புணர்ந்துள்ள சொல் எது ?

A. பள்ளித்தோழன்

B. திரைப்படம்

C. மரக்கலன்

D. கருவிழி

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 27. Unanswered

‘ மூதூர் ’ - இச்சொல்லில் பயின்று வராத புணர்ச்சி விதியினைத் தேர்ந்தெடு .

A. இனமிகல்

B. ஈறுபோதல்

C. ஆதிநீடல்

D. உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 28. Unanswered

சேர்த்து எழுதுக : ‘ மண் + மகள் ’

A. மணமகள்

B. மண்மகள்

C. A மற்றும் B

D. மேற்கண்ட எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 29. Unanswered

'பைந்தமிழ்' – என்னும் சொல் நிலைமாற்றமடைந்து புணரும் சரியான நன்னூல் விதி வரிசையைத் தேர்ந்தெடு.

A. ஈறுபோதல் → ஆதிநீடல் → இணையவும் → இனமிகல்

B. ஈறுபோதல் → அடி அகரம் 'ஐ' ஆதல் → இணையவும் → இனமிகல்

C. ஈறுபோதல் → இடை உகரம் இய்யாதல் → உடம்படுமெய் → உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.

D. ஈறுபோதல் → இணையவும் → தனிக்குறில் முன் ஒற்று இரட்டும் → இனமிகல்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 30. Unanswered

' பைந்தமிழ் ' என்ற சொல்லாக்கப் புணர்ச்சியில் , பைசு + தமிழ் என்ற நிலையிலிருந்து ' சு ' என்ற எழுத்து நீங்குவதற்குக் காரணமான விதி எது ?

A. ஈறுபோதல்

B. அடி அகரம் ' ஐ ' ஆதல்

C. இணையவும்

D. இனமிகல்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 31. Unanswered

பின்வருவனவற்றுள் ' மகர ஈற்றுப் புணர்ச்சிக்கு ' உரிய சரியான சான்று எது ?

A. வாயொலி

B. கல்லதர்

C. பெரியன்

D. பாடவேளை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 32. Unanswered

‘ கல் + தீது ’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் எது ?

A. கல்தீது

B. கற்றீது

C. கட்தீது

D. கன்னது

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 33. Unanswered

‘ சே + அழகு ’ என்ற சொற்கள் புணரும் போது தோன்றுவது எது ?

A. சேயழகு

B. சேவழகு

C. A மற்றும் B

D. சேஅழகு

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 34. Unanswered

‘ என் + தந்தை ’ என்பதைச் சேர்ந்தெழுதும் போது கிடைக்கும் சொல் எது ?

A. எம் தந்தை

B. என் தந்தை

C. எந்தந்தை

D. என்றந்தை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 35. Unanswered

தவறாக பிரிந்துள்ள சொல்லைத் தேர்ந்தெடு .

A. கந்தவேள் = கந்தன் + வேள்

B. வயிற்று வலி = வயிறு + வலி

C. கோட்டுகிர் = கோட்டு + உகிர்

D. பன்முகம் = பன்மை + முகம்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 36. Unanswered

‘ மண் + தீது ’ என்பதனைச் சேர்ந்தெழுதக் கிடைக்கும் சொல் எது ?

A. மண்தீது

B. மட்டீது

C. மண்டீது

D. மண்டிது

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 37. Unanswered

‘ கட்குடம் ’ என்பதனைப் பிரித்தெழுதக் கிடைக்கும் சொல் எது ?

A. கள் + குடம்

B. கல் + குடம்

C. கூட்டு + உடம்

D. கண் + குடம்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a

b) b
c) c
d) d
e) e

QUESTION 38. Unanswered

‘ காட்டிடைச் சென்றான் ’ - இச்சொற்றொடரில் அமைந்துள்ள இலக்கண விதி எது ?

A. ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும் .

B. ஏழாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும் .

C. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும் .

D. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும் .

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 39. Unanswered

இரண்டாம் வேற்றுமைத் தொகையாயிருப்பினும் எவ்வகை குற்றியலுகரமாக இருந்தால் வல்லினம் மிகும் ?

A. மென்தொடர்க் குற்றியலுகரம்

B. இடைத்தொடர்க் குற்றியலுகரம்

C. வன்தொடர்க் குற்றியலுகரம்

D. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b

c) c
d) d
e) e

QUESTION 40. Unanswered

கீழ்க்கண்டவற்றுள் ‘ ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும் ’ என்னும் விதிக்கும் பொருந்தும் சொல் எது ?

A. தண்ணீர்க்குடம்

B. புலித்தோல்

C. மரப்பெட்டி

D. பட்டுச்சேலை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 41. Unanswered

நான்காம் வேற்றுமையில் எவ்வகை பெயர்களின் பின் வல்லினம் மிகும் ?

A. உயர்திணைப் பெயர்கள்

B. அஃறிணைப் பெயர்கள்

C. A மற்றும் B ஆகிய இரண்டும்

D. மேற்கண்ட எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c

d) d
e) e

QUESTION 42. Unanswered

“ குருவிக்கூடு ” என்ற சொல்லுக்குரிய சரியான இலக்கண விதி எது ?

A. ஏழாம் வேற்றுமைத் தொகையின்பின் வல்லினம் மிகும் .

B. ஆறாம் வேற்றுமைத் தொகையில் அஃறிணைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும் .

C. ஈறுகேட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லிணம் மிகும் .

D. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும் .

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 43. Unanswered

‘ என ’, ‘ ஆக ’ போன்ற சொற்கள் எவ்வகையைச் சார்ந்தவை ?

A. பெயரெச்சங்கள்

B. வினையெச்சங்கள்

C. சொல்லுருபுகள்

D. இடைச்சொற்கள்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 44. Unanswered

“ மிகப் பெரியவர் ” - இச்சொற்றொடரில் ‘ மிக ’ என்னும் சொல் எவ்வகையைச் சார்ந்தது ? அத ன் பின் வல்லினம் மிகுமா ?

A. இடைச்சொல் , வல்லினம் மிகும்

B. வினைச் சொல் , வல்லினம் மிகாது

C. பெயர்ச்சொல் , வல்லினம் மிகும்

D. உரிச்சொல் , வல்லினம் மிகும்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 45. Unanswered

கீழ்க்காணும் ‘ வல்லினம் மிகும் இடம் ’ பற்றிய இலக்கணக் கூற்றில் பிழையானதைத் தேர்ந்தெடு .

A. ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும் .

B. வினைத்தொகையில் வல்லினம் மிகும் .

C. எட்டு , பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகும் .

D. முன்னர் , பின்னர் ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகும் .

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 46. Unanswered

சந்திப் பிழையானதைத் தேர்ந்தெடு .

A. கொல்க்களிறு

B. வேர்ப்பலா

C. பின்னர்க் காண்க

D. பாட்டுப்பாடு

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 47. Unanswered

பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு .

A. அலகு - பறவையின் மூக்கு

B. அளகு - பெண்மயில்

C. அழகு - தசை

D. ஊண் - தசை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 48. Unanswered

பொருள் வேறுபாடறிந்து பொருத்துக.

a) இர 1. பாத்திரம்
b) இற 2. உயிரினம்
c) தவலை 3. பிச்சை எடு
d) தவளை 4. செத்துப்போ

குறியீடுகள்:

	a	*b*	*c*	*d*
A.	1	4	3	2
B.	4	3	2	1
C.	1	3	4	2
D.	3	4	1	2

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 49. Unanswered

கீழ்க்காணும் சொற்றொடர்களில் சரியான மயங்கொலிச் சொற்கள் பயின்று வந்துள்ள தொடரைத் தேர்ந்தெடு .

I. அதிகாலையில் கோவில் மணி ஒளிரும் .

II. தீய பழக்கங்களைச் சமூகத்திலிருந்து ஒழிக்க வேண்டும் .

III. விளக்கு எப்போதும் ஒலிக்கும் தன்மை உடையது .

குறியீடுகள்:

A. I மற்றும் III மட்டும்

B. II மட்டும்

C. I I மற்றும் III மட்டும்

D. அனைத்தும்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 50. Unanswered

தமிழில் உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு கொண்டு , பொருள் வேறுபாடு தரும் ' மயங்கொலி ' எழுத்துகள் எத்தனை உள்ளன ?

A. 6

B. 7

C. 8

D. 9

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 51. Unanswered

ஒலி வேறுபாடறிந்து பொருள் தருக .

அலம் அளம்

A. சிறப்பு - பிசாசம்

B. பள்ளம் - விஷம்

C. விஷம் - பள்ளம்

D. கலப்பை - உப்பளம்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 52. Unanswered

‘ உளர்தல் ’ பொருள் தருக .

A. காய்தல்

B. வாடுதல்

C. சுழலல்

D. திரண்ட கல்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 53. Unanswered

‘ யானைத்திப்பிலி ’ எனப் பொருள் தரும் சொல்லைத் தேர்ந்தெடு .

A. அளை

B. அலகம்

C. அளகு

D. அலகை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 54. Unanswered

‘ பல்வகை மீன்களைப் பிடிக்க வலை விரித்தான்; ஆனால் கையில் வைத்திருந்த வளையும் ஆழ்கடலில் விழுந்தது ’ - இத்தொடரில் இடம்பெற்றுள்ள ‘ வலை ’, ‘ வளை ’ ஆகியவற்றின் சரியான பொருள் இணையைத் தேர்ந்தெடுக்கவும் .

A. மீன்பிடிவலை , வளையல்

B. வளையல் , பொந்து

C. சுருபுன்னை , வெண்மை

D. காற்று , வலிமை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 55. Unanswered

‘ விளங்கு ’ - இச்சொல்லிற்கான இருபொருள் தருக .

A. மிருகம் , கையைப் பூட்டுதல்

B. ஒளிர் , சிறப்புடன் இரு

C. தமி , தவிர்

D. மேற்கூறிய அனைத்தும்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a

b) b
c) c
d) d
e) e

QUESTION 56. Unanswered

‘ கலம் ’, ‘ களம் ’, ‘ கழகம் ’ ஆகியவற்றின் சரியான பொருளறிந்து வரிசைப்படுத்துக .

A. பாத்திரம் , இடம் , அமைப்பு

B. நாள்காட்டி , உடல் , அழகு

C. வித்தை , வயல் , காடு

D. ஆவணம் , உப்பளம் , பறவை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 57. Unanswered

‘ உளை ’ மற்றும் ‘ உழை ’ ஆகிய சொற்களின் பொருள் முறையே :

A. பிடரிமயிர் , பாடுபடுதல்

B. பாடுபடுதல் , பிடரிமயிர்

C. சமைத்தல் , வாடல்

D. காய்தல் , வாடல்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c

d) d
e) e

QUESTION 58. Unanswered

தவறான இணையைத் தேர்ந்தெடு .

(சொல்) - (பொருள்)

A. உழ - பண்படுத்த

B. உளி - தறிக்குங் கருவி

C. உழி - இடம் , பக்கம்

D. உளம் - திரண்ட கல்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 59. Unanswered

அழித்து விடு என்னும் பொருள் தரும் இருவேறு சொற்களைத் தேர்ந்தெடு .

A. அலி , ஒலி

B. அளி , ஒளி

C. அழி , ஒழி

D. அலியு , அழுகு

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d

e) e

QUESTION 60. Unanswered

குழந்தை தயிரைச் சோற்றுடன் பிசைந்து விளையாடியபடியே , வீட்டின் முற்றத்தில் அங்கும் இங்கும் ஓடித் திரிந்தது - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லிற்கு இணையான சொற்களைத் தேர்ந்தெடு .

A. அளை , அலை

B. அலை , அளை

C. அளை , அளை

D. அலை , அலை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 61. Unanswered

பெயரிடை நிலையான ‘ ந் ’ என்பதைப் பெற்று வினையிலிருந்து உருவாகும் பெயர்ச் சொற்களுள் தவறான ஒன்றைக் கண்டறிக .

A. ஓட்டுநர்

B. ஊரிநர்

C. அனுப்புநர்

D. பெறுநர்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d

e) e

QUESTION 62. Unanswered

பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க .

I. ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் ளகரம் டகரமாய்த் திரிவதுண்டு .

II. ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் ணகரமாய்த் திரிவதுண்டு .

மேற்கண்ட இணைகளில் தவறானது எது / எவை ?

A. I மட்டும்

B. II மட்டும்

C. இரண்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 63. Unanswered

‘ அல் + திணை = அஃறிணை ’, ‘ பல் + துளி = பஃறுளி ’ - இப்புணர்ச்சிக்குரிய சரியான விதியைக் கண்டறிக .

A. லகரத்தைத் தொடர்ந்து நகரமும் தகரமும் வரும்போது ஆய்தமாகும் .

B. அல்வழியில் , தனிக்குறிலை அடுத்து லகரம் தகரம் வரும்போது லகரம் ஆய்தமாக மாறும் , தகரமும் றகரமாகும் .

C. ளகரத்தைத் தொடர்ந்து வல்லினமும் மெல்லினமும் வரும்போது ஆய்தமாகும் .

D. தனிக்குறில் அல்லாத நெடிலின் முன் லகரம் ஆய்தமாகும் .

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 64. Unanswered

இரு பொருள் தருக : ‘ தொளை ’

A. அழிவு , வீண்

B. கேடு , சூனியம்

C. தொல்லை , அழித்துவிடு

D. சந்து , துவாரம்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 65. Unanswered

பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க .

I. அகரம் அண்மையில் உள்ளதையும் , இகரம் சேய்மையில் உள்ளதையும் சுட்டும் .

II. சங்க இலக்கியங்களில் ‘ உகர ’ இடைநிலைச் சுட்டுகள் வழக்கில் இருந்துள்ளன .

III. ‘ அ , இ ’ ஆகிய சுட்டெழுத்துகள் தனியே நின்று சுட்டும்போது ஆண் பெண் அனைவரையும் பொதுவாகச் சுட்டுகின்றன .

மேற்கண்டவற்றுள் எவை சரியானவை ?

A. I மற்றும் II மட்டும்

B. I I மற்றும் III மட்டும்

C. I மற்றும் III மட்டும்

D. அனைத்தும்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 66. Unanswered

கூற்று (A) : தற்காலத் தமிழில் சுட்டுச் சொல்லாக ' உ ' என்னும் எழுத்தைப் பயன்படுத்துவது இல்லை .

காரணம் (R) : ' உ ' என்பது சேய்மைக்கும் அண்மைக்கும் இடையில் உள்ளதைச் சுட்டுவதாகும் . தற்காலத் தமிழில் இடைநிலைச் சுட்டுப் பெயர்களாகிய உவன் , உவள் , உவர் போன்றவை வழக்கற்றுப் போய்விட்டன .

குறியீடுகள் :

A. (A) மற்றும் (R) சரி மற்றும் (A) க்கு (R) சரியான விளக்கம் .

B. (A) மற்றும் (R) சரி மற்றும் (A) க்கு (R) சரியான விளக்கமல்ல .

C. (A) சரி ஆனால் (R) தவறு .

D. (A) தவறு ஆனால் R) சரி .

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 67. Unanswered

பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க .

I. ' அப்பையன் , இப்பெண் , இவ்வீடு ' என்று சுட்டும்போது , அச்சொற்கள் திணை , பால் வேறுபாடுகளையும் சுட்டுகின்றன .

II. உவன் காண் குமுதன் ; குமுதாக்கனும் ஊங்கு அவன் காண் ;

இவன் காண் கவயன் ” - என்னும் கம்பராமாயணப் பாடலடிகளில் அகரம் , இகரம் , உகரம் ஆகிய மூன்று சுட்டுப் பெயர்களும் வந்துள்ளன .

மேற்கண்ட இணைகளில் சரியானது எது / எவை ?

A. I மட்டும்

B. II மட்டும்

C. இரண்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 68. Unanswered

கீழ்வருவனவற்றுள் சரியான தொடரைக் கண்டறிக .

A. ஒவ்வொரு வீடுகளிலும் தேசியக்கொடி ஏற்றப்பட்டது .

B. ஒவ்வொரு மாநிலங்களும் திட்டங்களைச் செயல்படுத்தின .

C. ஒவ்வொரு வீட்டிற்கும் மின்சாரம் வழங்கப்பட்டது .

D. ஒவ்வொரு மாநிலங்களும் தனித்தன்மை வாய்ந்தவை .

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 69. Unanswered

வழுவற்ற வாக்கியத்தைத் தேர்ந்தெடு .

A. தந்தை தன் மகனையும் மகளையும் அழைத்தார்கள்

B. தந்தை தன் மகனையும் மகளையும் அழைத்தார் .

C. தந்தை தன் மகனையும் மகளையும் அழைத்தன .

D. தந்தை தன் மகனையும் மகளையும் அழைத்தது .

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 70. Unanswered

‘ விஷக்காய்ச்சல் நாகை , கடலூர் மாவட்டங்களில் இருக்கும் மக்களிடையே பரவி வருகிறது ’ - இத்தொடரின் எழுவாயைக் கண்டறிக .

A. மாவட்டங்கள்

B. மக்கள்

C. விஷக்காய்ச்சல்

D. நாகை , கடலூர்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 71. Unanswered

கூற்று (A) **:** ‘ விளையாட்டுத் திடல் பணியாளர்களால் தூய்மை செய்யப்பட்டது ’ - இத் தொடரில் ‘ செய்யப்பட்டது ’ என்ற ஒருமை வினைமுற்று இடம் பெற்றுள்ளது சரியானது .

காரணம் (R) **:** இத்தொடரின் எழுவாய் ‘ பணியாளர் ’ என்பதாகும் . அது ஒருமை என்பதால் ஒருமை வினைமுற்று பெற்று முடிந்துள்ளது .

குறியீடுகள் :

A. கூற்று (A) சரி , காரணம் (R) தவறு

B. கூற்று (A) தவறு , காரணம் (R) சரி

C. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி

D. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் தவறு

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 72. Unanswered

மரபுப் பிழையற்ற தூய தமிழ்ச் சொற்களைக் கண்டறிக .

A. மூவேந்தர்கள் , அறுசுவைகள்

B. முத்தமிழ்கள் , எட்டுத்தொகைகள்

C. A மற்றும் B மட்டும்

D. மூவேந்தர் , முக்கனி

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 73. Unanswered

இலக்கண முறைப்படி பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடு .

A. எல்லா உறுப்பினரும் கூட்டத்திற்கு வந்தனர் .

B. எல்லா வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டன .

C. எல்லா உறுப்பினர்களும் கூட்டத்திற்கு வந்தனர் .

D. எல்லா வீட்டிலும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டது .

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 74. Unanswered

கீழ்வருவனவற்றுள் ' இடம் ' அடிப்படையாகக் கொண்டு பிறந்த வினைமுற்று இணையைத் தேர்ந்தெடு .

A. நாடன் , ஊரன்

B. கரியன் , நல்லன்

C. குழையன் , பொன்னன்

D. தையினால் , சித்திரையாள்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 75. Unanswered

சிரித்த பெண் , சிரித்து மகிழ்ந்தான் - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கண வகையைத் தேர்ந்தெடுக்க .

A. வினையெச்சம் , பெயரெச்சம்

B. பெயரெச்சம் , வினையெச்சம்

C. வினைமுற்று , வினையெச்சம்

D. தெரிநிலை வினைமுற்று , குறிப்பு வினைமுற்று

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 76. Unanswered

குறிப்பு வினைமுற்று எதனை மட்டும் வெளிப்படையாக உணர்த்தும் ?

A. காலத்தை மட்டும்

B. வினை செய்பவனை மட்டும்

C. தொழிலை மட்டும்

D. கருவியை மட்டும்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 77. Unanswered

‘ நடையன் ’ - எவ்வகை பெயர்ச்சொல்லின் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று ?

A. சினை

B. குணம்

C. தொழில்

D. இடம்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 78. Unanswered

பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க .

I. குறிப்பு வினைமுற்று பெயர்ச் சொல்லை அடியாகக் கொண்டு தோன்றும் .

II. குறிப்பு வினைமுற்றில் காலம் காட்டும் இடைநிலைகள் வெளிப்படையாகத் தோன்றும் .

மேற்கண்ட இணைகளில் சரியானது எது / எவை ?

A. I மட்டும்

B. II மட்டும்

C. இரண்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 79. Unanswered

கூற்று (A) : ‘ வெளுத்தான் ’ என்னும் பொதுவினையானது தன்வினை , பிறவினை இரண்டிற்றும் பொதுவாக அமைகிறது .

காரணம் (R) : வெளுத்தல் என்னும் தொழிலில் ‘ வெளுப்பித்தல் ’ என்னும் பிறவினை வடிவம் காணப்படுவதில்லை .

குறியீடுகள் :

A. (A) மற்றும் (R) சரி மற்றும் (A) க்கு (R) சரியான விளக்கம் .

B. (A) மற்றும் (R) சரி மற்றும் (A) க்கு (R) சரியான விளக்கமல்ல .

C. (A) சரி ஆனால் (R) தவறு .

D. (A) தவறு ஆனால் R) சரி .

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 80. Unanswered

பின்வருவனவற்றுள் பிழையான கூற்றினைத் தேர்ந்தெடு .

A. தெரிநிலை வினையெச்ச வாய்பாடுகளுள் ‘ செய்து , செய்பு , செய்யா , செய்யூ , செய்தென ’ ஆகிய ஐந்தும் இறந்த காலத்திற்கு உரியவை ஆகும் .

B. ‘ செய ’ என்னும் வினையெச்ச வாய்ப்பாடு நிகழ்காலத்திற்கு மட்டுமே உரியதாகும் .

C. குறிப்பு வினையெச்சம் தனக்கு அடையாளமாக ‘ அ ’ விகுதியைப் பெற்று , பெயர்ச்சொல்லின் அடியாகப் பிறக்கும் .

D. மேற்கண்ட அனைத்தும்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c

d) d
e) e

QUESTION 81. Unanswered

“ புலிகொல்யானை ” - இத்தொடர் உணர்த்தும் இலக்கண விதிகள் குறித்த பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க .

I. இத்தொடர் ‘ புலியைக் கொல்லும் யானை ’ என்னும் செய்வினைப் பொருளைத் தரும் .

II. ‘ புலியால் கொல்லப்படும் யானை ’ என்னும் செயப்பாட்டு வினைப் பொருளைத் தருகிறது .

III. இதில் ‘ கொல் ’ என்னும் வினைப்பகுதி மட்டும் இடம்பெற்றுள்ளதால் இது செய்வினை , செயப்பாட்டு வினை இரண்டிற்கும் பொதுவினையாக அமைகிறது .

மேற்கண்டவற்றுள் எது / எவை சரியானது ?

A. I மற்றும் II மட்டும்

B. I I மற்றும் III மட்டும்

C. I மற்றும் III மட்டும்

D. அனைத்தும்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 82. Unanswered

‘ நீ வரின் மகிழ்வேன் ’ - இத்தொடரில் பயின்று வந்துள்ள வினையெச்ச வாய்பாடு எது ?

A. செய்து

B. செய

C. செயின்

D. செய்யுள்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 83. Unanswered

‘ பெரிய வீடு ’ - இத்தொடர் உணர்த்தும் இலக்கணக் குறிப்பு யாது ?

A. தெரிநிலை பெயரெச்சம்

B. குறிப்புப் பெயரெச்சம்

C. குறிப்பு வினையெச்சம்

D. தெரிநிலை வினையெச்சம்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 84. Unanswered

கூற்று (A) : ‘ ஓடி , மெல்ல ’ என்பன எச்சங்கள் ஆகும் .

காரணம் (R) : இவை ‘ வந்தான் , போகிறான் ’ என்னும் வினைகளைக் கொண்டு முடிந்தமையால் வினையெச்சங்கள் எனப்பட்டன .

குறியீடுகள் :

A. (A) மற்றும் (R) சரி மற்றும் (A) க்கு (R) சரியான விளக்கம் .

B. (A) மற்றும் (R) சரி மற்றும் (A) க்கு (R) சரியான விளக்கமல்ல .

C. (A) சரி ஆனால் (R) தவறு .

D. (A) தவறு ஆனால் R) சரி .

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 85. Unanswered

‘ அடித்தான் ’ என்ற செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும்போது இணையும் துணைவினை எது ?

A. படு

B. வை

C. கொள்

D. செய்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 86. Unanswered

‘ மொழி காலந்தோறும் வளர்ந்து வருகிறது . இதனால் மொழியில் புதிய மாற்றங்கள் ஏற்படுகின்றன ’ - இக்கூற்றின்படி எச்சங்களின் வடிவ மாற்றத்திற்குக் காரணம் என்ன ?

A. இலக்கணக் கோட்பாடுகள்

B. கால மாற்றத்தினால் ஏற்படும் மொழி வளர்ச்சி

C. பிறமொழிச் சொற்களின் கலப்பு

D. பேச்சு வழக்கு மட்டுமே

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 87. Unanswered

பின்வரும் வினையெச்ச வாய்பாடுகளுள் எதிர்காலத்தை உணர்த்தும் வாய்பாடு எது ?

A. செய

B. செய்

C. செய்பு

D. வான்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 88. Unanswered

‘ கற்றான் ’ என்பதன் எதிர்மறை வினைச்சொல் எது ?

A. கற்பித்தான்

B. கல்லான்

C. கற்றிலன்

D. அல்லன்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a

b) b
c) c
d) d
e) e

QUESTION 89. Unanswered

‘ நடந்தான் - கடத்தினான் ’ என்பது எவ்வகை வினை இணை ?

A. உடன்பாட்டு வினை , எதிர்மறை வினை

B. செய்வினை , செயப்பாட்டுவினை

C. தன்வினை , பிறவினை

D. தனிவினை , செய்வினை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 90. Unanswered

‘ நான் படிக்கப் போகிறேன் ’ - இத்தொடரிலுள்ள வினையெச்ச வாய்ப்பாடு எக்காலத்திற்குரியது ?

A. இறந்தகாலம்

B. நிகழ்காலம்

C. எதிர்காலம்

D. காலம் காட்டாது

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b

c) c
d) d
e) e

QUESTION 91. Unanswered

தவறான இணையைத் தேர்ந்தெடு :

A. மெல்ல பேசு - தெரிநிலைப் பெயரெச்சம்

B. அழகிய தோட்டம் - குறிப்புப் பெயரெச்சம்

C. பெரிய வீடு - குறிப்புப் பெயரெச்சம்

D. ஓடி வந்தான் - தெரிநிலை வினையெச்சம்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 92. Unanswered

“ நல்லவன் அவன் ” எவ்வகை முற்றுவினைக்கு எடுத்துக்காட்டு ஆகும் ?

A. தெரிநிலை முற்றுவினை (பொருட்பெயர் கொண்டது)

B. குறிப்பு முற்றுவினை (பொருட்பெயர் கொண்டது)

C. தெரிநிலை முற்றுவினை (தொழிற்பெயர் கொண்டது)

D. குறிப்பு முற்றுவினை (குணப்பெயர் கொண்டது)

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d

e) e

QUESTION 93. Unanswered

‘ மற்று அது அம்ம ’ இத்தொடரிலுள்ள இடைச்சொற்கள் எவ்வகையாக அமைந்துள்ளன ?

A. வினையின் அகத்துறுப்பாக

B. பெயரில் புறத்துறுப்பாய் முன்னும் பின்னும்

C. வினையின் புறத்துறுப்பாய் முன்னும் பின்னும்

D. பெயரின் அகத்துறுப்பாய்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 94. Unanswered

‘ ஐயோ ! இறந்தானே ’ இத்தொடரில் பயின்று வந்துள்ள இடைச்சொற்கள் சொல்லின் எவ்விடங்களில் அமைந்துள்ளன ?

A. முன்னும் பின்னும் புறத்துறுப்பாக வந்துள்ளன

B. அகத்துறுப்பான மட்டுமே வந்துள்ளன

C. சொல்லின் இடையில் மட்டுமே வந்துள்ளன

D. விகுதியாக மட்டுமே வந்துள்ளன

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 95. Unanswered

‘ தடந்தனன் ’ இச்சொல்லின் அகத்துறுப்பாக அமைந்துள்ள இடைச்சொல் அமைப்பைக் கண்டறிக .

A. நகர ஒற்றாகிய இறந்தகால இடைநிலையும் அன் சாரியையும் அன் விகுதியும்

B. தகர ஒற்றாகிய இறந்தகால இடைநிலையும் அன் சாரியையும் அன் விகுதியும்

C. மகர ஒற்றாகிய இறந்தகால இடைநிலையும் அன் சாரியையும் அன் விகுதியும்

D. இடைநிலை ஏதுமற்ற விகுதிப்புணர்ச்சி

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 96. Unanswered

‘ கற்றதனா லாய பயனென் கொல் ’ இத்தொடரில் பயின்று வந்துள்ள ‘ கொல் ’ என்னும் இடைச்சொல் எவ்வகையைச் சார்ந்தது ?

A. இணைப்பிடைச் சொல்

B. அசைச்சொல்

C. தத்தம் பொருள் உணர்த்தும் சொல்

D. சொல்லுருபு

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 97. Unanswered

‘ இசை நிறைப்பன ’ வகை இடைச்சொற்களுக்குப் பொருத்தமான சான்று எது ?

A. அன் , அத்து

B. ஓ ! ஓ

C. ஐயோ ! அப்பா !

D. மூலம் , குறித்து

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 98. Unanswered

பொருத்துக.

a) குளிர்ந்தது நிலம்	1. சினைப்பெயர்
b) குவிந்தது கை	2. குணப்பெயர்
c) அழிந்தது தீமை	3. இடப்பெயர்
d) அற்றது பிறப்பு	4. தொழிற்பெயர்

குறியீடுகள்:

	a	*b*	*c*	*d*
A.	3	1	2	4
B.	1	2	4	3
C.	2	1	3	4
D.	4	2	3	1

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 99. Unanswered

இடைச்சொல் பற்றிய தவறான கூற்றைக் கண்டறிக .

A. தமிழில் பெயர்ச்சொற்கள் , வினைச்சொற்களைப் போல இடைச்சொற்கள் மிகுதியாக இல்லை

B. இடைச்சொற்கள் மொழியின் பயன்பாட்டை முழுமையாக்குகின்றன

C. இடைச்சொற்கள் தனித்து வந்து பொருள் தரும் இயல்புடையவை

D. ' உம் ' , ' ஐ ' , ' மற்று ' ஆகியவை இடைச்சொற்களுக்கு உதாரணங்களாகும்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 100. Unanswered

தவறான இணையைக் கண்டறிக .

(சொல்) (வேர்ச்சொல்)

A. வாழ்க - வாழ்

B. வந்து - வா

C. அடக்குமுறை - அடக்கு

D. கடாவினர் - கடா

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 101. Unanswered

பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க .

I. ' நிற்கும் ' என்ற சொல்லின் வேர்ச்சொல் ' நில் ' ஆகும் .

II. ' தாழ்ந்த ' என்ற சொல்லின் வேர்ச்சொல் ' தாழ் ' ஆகும் .

மேற்கண்ட கூற்றுகளில் எது / எவை சரியானது ?

A. I மட்டும்

B. II மட்டும்

C. இரண்டும்

D. இரண்டுமில்லை

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 102. Unanswered

' தேற்றாய் ', ' சொரிந்த ' ஆகிய சொற்களுக்குரிய வேர்ச்சொற்களைத் தேர்ந்தெடுக்க .

A. தேற்று , சொரி

B. தேறு , சொரி

C. தேறு , சொரிந்து

D. தேற்று , சொரிக

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 103. Unanswered

தவறான வேர்ச்சொல் இணையைக் கண்டறிக .

(சொல்) (வேர்ச்சொல்)

A. ஏற்றி - ஏறு

B. உற்ற - உறு

C. உணர்ந்தோர் - உணர்

D. சாற்றுகேன் - சாற்று

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 104. Unanswered

‘ கொன்றான் ’, ‘ சொன்னார் ’ ஆகிய சொற்களுக்குரிய வேர்ச்சொல்லின் சரியான வரிசை எது ?

A. கொல் , சொல்

B. கொன்று , சொல்லு

C. கொலை , சொல்

D. கொள் , சொன்னார்

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 105. Unanswered

பின்வருவனவற்றுள் " அறி " என்னும் வேர்ச்சொல்லின் சரியான சொல் வடிவங்கள் எவை ?

I. அறியா

II. அறிந்தார்

III. அறுவடை

குறியீடுகள்:

A. I, III மட்டும்

B. I, II மட்டும்

C. II, III மட்டும்

D. I, II மற்றும் III

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 106. Unanswered

' மாந்தர்தம் மூலமொழி தோன்றிய இடமாக தென்னிந்தியா இருக்கலாம் ' என வேர்ச்சொல் ஆய்வறிஞர்கள் கருதுவதற்குப் பொருத்தமான முதன்மைக் காரணம் எது ?

A. ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பேசப்படும் மொழிகளின் ஒற்றுமை

B. எழுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மாந்தர்கள் தென்னிந்தியாவிற்கு வந்து விட்டது

C. மதிமாந்தர்களின் மூல இடம் தென்னிந்தியாவாக இருந்தது

D. தாய்மொழி ஆய்வு இங்குதான் முதன்முதலில் தொடங்கப்பட்டது

E. விடை தெரியவில்லை

Answer codes:

a) a
b) b
c) c
d) d
e) e

QUESTION 107. Unanswered

தவறான இணையைக் கண்டறிக .

